I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.1
OS.NO.158/2022

**Name** : Karthikeyan
**Father/Husband Name** : Durairaj

**Age** : 56

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 16.12.2025**

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**விசாரணை தொடங்கும் நேரம்:02.10 p.m.**

**4 மற்றும் 5 வது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவா எதற்காக போட்டுள்ளேன் என்றால் பாக பிரிவினைக்காக தாக்கல் செய்யப்பட்டது. நான் யாரிடம் பாக பிரிவினை கேட்கிறேன் என்றால் என்னுடைய சகோதரர் மற்றும் சகோதரிகளுக்கிடையே கேட்கிறேன். என் தாயாரை 1வது பிரதிவாதியாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். 2வது பிரதிவாதி தேவசேனா என் அக்கா. 3வது பிரதிவாதி என் மூத்த சகோதரர். எனக்கும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கிடையே தான் பிரச்சனை என்றால் சரிதான். 4 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக என் தாவாவில் எந்த விதமான பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். எனவே இந்த பாக பிரிவினையை பொறுத்தவரைக்கும் 4 மற்றும் 5 பிரதிவாதிகள் 3ம் தரப்பினர்கள் என்றாலும் எங்களை வழக்கில் சேர்த்தது தவறு என்றாலும் 4 மற்றும் 5 பிரதிவாதிகளை பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் தவறு, வருவாய் அதிகாரிகள் என்னை விசாரணைக்கு

அழைத்தார்கள், அங்கு சென்று என்னுடைய ஆட்சேபணைகளை தெரிவித்தேன். அதனால் இந்த வழக்கில் அவர்களை தரப்பினராக சேர்த்துள்ளேன். அவர்களுக்கு எதிராக எந்தவிதமான உத்தரவும் நான் கோரவில்லை என்றால் சரிதான், பொதுவாக குறிப்பிட்டுள்ளேன். வழக்கு பரிகாரத்தில் குறிப்பிட்டு கேட்கவில்லை என்றால் சரிதான். எனவே 4 மற்றும் 5 பிரதிவாதிகளை பொறுத்தவரைக்கும் இந்த தாவா தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரிதான்.

**விசாரணை முடிந்த நேரம்:** 02.20 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI

Digitally signed by G SANTHI
Date: 2025.12.18 19:44:51 -0100

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.